**Starting time 12.27 P.M.**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 67/2012**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 22.04.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling: | | Age | : |

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> புல எண். 274/1 மற்றும் 274/5 ஆகியவற்றில் உள்ள நிலங்களுக்காகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். 102/2012 என்ற வழக்கில் இவ்வழக்கின் பிரதிவாதி புல எண். 274/1 ஏக்.1.82 மற்றும் புல எண். 274/5-ல் ஒரு 38 செண்ட் ஒரு பகுதியும், 48 செண்ட் ஒரு பகுதியும் ஆக மொத்தம் 2 ஏக்.20 செண்ட் நிலத்தை முதல் அயிட்ட சொத்தாக காட்டியுள்ளார் என்றால், ஆமாம்.

2. பனைமடல் கிராமத்தில் 274-3ஏ அதில் 10 செண்ட் நிலம் பிரதிவாதிகளுடையது என்றாலும், அதேபோல புல எண். 274/4-ல் 1 ஏக் 12 செண்ட் நிலம் பிரதிவாதிகளுடையது என்றாலும், சரிதான். 2வது அயிட்ட சொத்திற்கு பக்கத்தில் அதே அளவு நிலம் எனக்கும் இருக்கிறது என்றால், ஆமாம். எனக்கு வடக்காகவும், பிரதிவாதிக்கு தெற்காகவும் அமைந்துள்ளது என்றால், ஆமாம். மேற்படி புல எண். 274/3ஏ மற்றும் 274/4 சம்மந்தமாக நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், ஆமாம்.

3. ஓடைக்கு கிழக்கில் இருக்கக்கூடிய புல எண். 274/1 மற்றும் 274/5ல் உள்ள நிலங்களில்

எனக்கு பாதி மற்றும் பிரதிவாதிக்கு பாதி என்றால், ஆமாம். எத்தனை தார்கள் உள்ளது என்றால், தென்வடலாக 5 தார்கள் உள்ளது. மேற்கிலிருந்து கிழக்கு பக்கமாக உள்ள 5 தார்களில் முதல் தாரில் இருவருக்கும் பங்குண்டு. அதில் எந்த எந்த பக்கம் நான் அனுபவித்து வருகிறேன் என்றால், ஓடைக்கு கிழக்கில் கிணற்றுக்கு வடக்கில் நான் அனுபவித்து வருகிறேன். அடுத்த தார் தொடர்ச்சியாக மூர்த்திக்கு என்றால், ஆமாம். 3வது தார் எனக்கும், 4வது தார் மூர்த்திக்கும் 5வது தார் எனக்கும் ஒதுக்கப்பட்டது.

4. கிணற்றை ஒட்டியவாறு எனக்கு உள்ள இடத்திற்கு செக்குபந்தி ஏதேனும் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. மேற்கிலிருந்து எனக்கு உரிமையான 3வது தாருக்கு எவ்வளவு நிலம் என்றும், செக்குபந்தி விவரமும் நான் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. மேற்கிலிருந்து கிழக்கு பக்கமாக உள்ள 5வது தாரின் விஸ்தீரணம், செக்குபந்தி சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

5. புல எண்.274/1 மற்றும் 274/5 எந்த தார் என்ன விஸ்தீரணம் என்ன செக்குபந்தி போன்ற விவரங்கள் சொல்லாததால் இந்த வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பனைமடல் தார்சாலையிலிருந்து கிழக்கில் எங்களுக்கு இருக்கும் சொத்துக்கள் சம்மந்தமாகவும், இந்த வழக்கில் வழக்கு சொத்தாக காண்பிக்கப்படவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

6. பனைமடல் தார்சாலையிலிருந்து ஒட்டினாற்போல அமைந்துள்ள புல எண். 271/3 மற்றும் 271/4 ஆகிய சொத்துகக்ளை காண்பித்தால் என்னுடைய வழக்கிற்கு விரோதமாகிவிடும என்பதால் தான் காண்பிக்கவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கு சொத்தானது எங்கள் இருவருக்கும் பாத்தியப்பட்ட கிழக்கால சொத்து என்றால், ஆமாம். மேற்கு பாக சொத்தை அசல் வழங்கது எண். 102/2012-ல் 2வது அயிட்ட சொத்தாக காண்பித்துள்ளார் என்றால், ஆமாம், ஆனால் அது தடம் இல்லை.

7. இரு வழக்கு சொத்தும் வெவ்வேறானவை என்றால், ஆமாம். பனைமடல் தார் சாலையிலிருந்து வடக்கு நோக்கி மண்ணூர் மலை பக்கமாக ஒரு தார் சாலை செல்கிறது என்றால், ஆமாம். அந்த சாலை எந்த எந்த ஊருக்கு செல்கிறது என்றால், இடையில் எந்த ஊரும் இல்லை. அது தார்சாலையா அல்லது மண்சாலையா என்றால், தார்சாலையாகவும் இருக்கிறது.

மண் சாலையாகவும் இருக்கிறது.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 12.48 P.M

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.